**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C)

| | | |
|---|---|---|
| Case No. | : | CC No.7/2023 |
| Deposition of witness for Prosecution | : | P.W–10 |
| Name | : | நாராயணன், வயது 50 |
| Father Name/Husband Name | : | குருசாமி |
| Village | : | காலாங்கரைப்பட்டி |
| Taluk | : | கோவில்பட்டி |
| Calling | : | தீப்பெட்டி தொழில் |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 10th day of May 2024.

**(எதிரி ஆஜர் இல்லை கு.வி.மு.ச பிரிவு 317 ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது காலாங்கரைப்பட்டியில் வசித்து தீப்பெட்டி தொழில் செய்கிறேன். கடந்த 23.08.2022 ஆம் தேதி காலை 06.00 மணிக்கு நானும் காளிராஜ் என்பவரும் கோவில்பட்டி–கழுகுமலை ரோடு, காலாங்கரைப்பட்டிக்கும் கெச்சிலாபுரத்திற்கு இடையே உள்ள வளைவு அருகே நின்று கொண்டிருந்தோம்.
2. அப்போது அங்கு வந்த போலிசார் இடத்தை சுற்றி விசாரித்து எழுதி என்னிடம் கையொப்பம் கேட்டார்கள். பின்னர் சுற்றியுள்ள இடத்தை வரைபடம் வரைந்தார்கள். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் (பார்வை மகஜரில்) உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். (**அந்த ஆவணம் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) வழக்கு பற்றி போலிசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

1. வழக்கில் இறந்த சண்முகராஜ் உங்கள் ஊர்காரர் என்றாலும் அவர் உங்களுக்கு நெடுநாள் பழக்கம் என்றாலும் சரிதான். இறந்து போன சண்முகராஜ் கோவில்பட்டி அரசு மருத்துவமனைக்கு கொண்டு வந்தார்கள் என்றால் ஆம்.
2. அங்கு சண்முகராஜ் தம்பி அ.சா.1 லட்சுமண பெருமாள் நின்றார் என்றால் சரிதான். அங்கு வைத்து அ.சா.1 மற்றும் உங்களை போலிசார் விசாரித்தார்கள் என்றால் சரிதான். அங்கு வைத்து உங்களிடம் அ.சா.1 மற்றும் காளிராஜ் ஆகியோரிடம் கையொப்பம் வாங்கினார்கள் என்றால் சரிதான்.

3. நீங்கள் முதல் விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய் என்றாலும் வழக்கில் இறந்த நபர் உங்கள் ஊர்க்காரர் என்பதால் அவருக்கு ஆதராவாக பொய் சாட்சி அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken before me in open court in the presence of accused and read over to the witness and acknowledged by him/her to be Correct.

Sd/ Tr. M. Kadarkarai Selvam
Judicial Magistrate No.I,
Kovilpatti.